# நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள் ரூ.40 கோடி செலவில் மேம்படுத்தப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலுரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

உறுப்பினர் அப்துல் சமது அவர்கள் சொன்னதுபோல, தமிழ்நாடு முழுவதும் தரமான அரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதையடுத்து, மாமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மற்றும் குடும்ப அட்டைதாரர்கள் வரையிலும் அனைவரது பாராட்டையும் நம் முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு தற்போது பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டை சிறுதானிய ஆண்டாக ஐக்கிய சபை அறிவித்திருந்தது. அதையொட்டி முதலமைச்சர் அவர்கள் சிறுதானியத்தை எந்த மாவட்டத்திலாவது வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே முதன்முறையாக கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு, முதற்கட்டமாக தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 2 கிலோ அரிசிக்கு மாற்றாக 2 கிலோ கேழ்வரகு வழங்கப்படுகிறது.

இதன் அடிப்படையிலே தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கே.எம்.எஸ். 2022 முதல் 2024 மே 6 வரை 1,659 டன் கேழ்வரகு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 38.46 காசுக்கு 940 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக விவசாயிகளிடமிருந்து அந்தக் கேழ்வரகு 25 ரூபாய், 26 ரூபாய்க்குதான் இடைத்தரகர்கள் வாங்கினார்கள்.

ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய அரசு அதை ரூபாய் 38.46 காசுக்குக் கொடுத்ததினால், விவசாயிகள் கேழ்வரகை இன்றைக்கு அதிகமாக அந்த மாவட்டங்களில் எல்லாம் பயிர் செய்து வருகிறார்கள் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பற்றிச் சொன்னார்கள். ஒன்றிய அரசால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் 2006 ஏப்ரல் திங்களிலிருந்து 59,852 kilolitre-ஆக இருந்த நிலையில், இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1-4-2021 அன்று 7,536 kilolitre-ஆகக் குறைக்கப்பட்டு, மீண்டும் 2,802 kilolitre வரை குறைக்கப்பட்டு, தற்போது

1-4-2024 முதல் வெறும் 1,084 kilolitre-தான் இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இதுசம்பந்தமாக, ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களுக்கு அதிகரிக்கக்கோரி கடிதம் எழுதினோம். தொடர்புடைய அமைச்சரை நேரில் சந்தித்துக் கோரிக்கை வைத்தும், நம் மாநிலத்தில் எரிவாயு இணைப்புகள் அதிகம் உள்ளதால், மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார்கள். மலைப் பகுதியில் குறிப்பாக கொடைக்கானல், வால்பாறை, நீலகிரி, ஏலகிரி, ஏற்காடு, கல்வராயன்மலை, ஜவ்வாதுமலை போன்ற மலைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுக்கு மண்ணெண்ணெயின் தேவை என்பது அதிகமாக இருக்கிறது.

### மண்ணெண்ணெய் ஒதுக்கீடு!

ஆனால், ஒன்றிய அரசு 8,000 KL ஆக இருந்ததை, இன்றைக்கு 1,000 KL ஆக இந்த 3 வருடத்திலே குறைத்திருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு நாம் பலமுறை போராடிப் பார்த்துவிட்டோம்.

உறுப்பினர்கள் எல்லோரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒன்றிய அரசிடம் பலமுறை வலியுறுத்தியும், இன்னும் அதற்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை.

எனவே, கண்டிப்பாக முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி, ஏற்கெனவே கட்டப்பட்ட தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களில் compound சுவர் இல்லை. தரை மோசமாக இருக்கிறது. அதேமாதிரி அங்கு வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு தங்கும் இடம், கழிப்பிட வசதி போன்ற எந்த வசதியும் இல்லாமல் இருந்தது. அதை சீர் செய்வதற்காக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 90 கோடி ரூபாய் நிதி கொடுத்து, அந்தப் பணியெல்லாம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அதேமாதிரி நேரடி கொள்முதல் நிலையங்கள். தமிழ்நாட்டிலே 4,000 நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதிலே 230 இடங்களில் மட்டும்தான் இன்றைக்கு 625 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு மட்டும்தான் நிரந்தர கட்டடங்கள் இருக்கிறது. ஆனால், மற்ற இடங்களில் வாடகை அடிப்படையிலும், தற்காலிகக் கீற்றுக் கொட்டகை மற்றும் திறந்தவெளி நிலங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில், நெல் சாகுபடி அதிகமுள்ள இடங்களில் எல்லாம் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையங்களை அரசு படிப்படியாக நிறுவி வருகிறது. 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 230 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 77 கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 153 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டும் கட்டுமானப் பணிகள் இன்றைக்கு பல்வேறு நிலைகளில் உள்ளன என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

### உழவர் உதவி மையம்!

அதேமாதிரி, உழவர் உதவி மையம். அறுவடை செய்த நெல்லை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வது மற்றும் இது தொடர்பான தகவலைப் பெறுவதில் உழவர் பெருமக்களுக்கு இருக்கும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக 'உழவர் உதவி மையம்' என்னும் தொலைபேசிச் சேவை இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் இயங்கும் உழவர் உதவி மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 599 3540 (6-இணைப்புகள்) மூலம் விவசாயிகள் நெல் விற்பனை தொடர்பான ஆலோசனை, விளக்கம் கேட்பதுடன் புகார்களும் அளிக்க முடியும். இந்தச் சேவை தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 21-10-2021 முதல் தற்போது வரை 12 ஆயிரத்து 925 அழைப்புகள் பெறப்பட்டு, தொடர்புடைய மண்டல அலுவலர்கள்மூலம், உழவர்கள் விரும்பிய சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேமாதிரி, விவசாயிகளுக்கு இந்த மூன்று ஆண்டுக்காலத்தில் வழங்கப்பட்ட தொகை 7-5-2021 முதல் 26-6-2024 நேற்று வரை 22 இலட்சத்து 97 ஆயிரத்து 343 விவசாயிகளிடமிருந்து, ஒரு கோடியே 31 இலட்சத்து 90 ஆயிரத்து 778 metric ton நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 28 ஆயிரத்து 245 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதேமாதிரி, அரவை ஆலைகள். கடந்த ஆட்சியிலே 376 அரவை ஆலைகள்தான் இருந்தது. அரைக்கின்ற திறன் சுமார் 5 இலட்சம் metric ton. முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றபின்பு, இன்றைக்கு அந்த அரவை ஆலைகளின் எண்ணிக்கை 639 ஆக உயர்த்தி, அரைக்கும் திறனை 11 இலட்சத்து 50 ஆயிரம் metric ton மாதந்தோறும் அரைத்து, இன்றைக்கு கலர் சார்ட்டர் என்ற இயந்திரம் ஒவ்வொரு மில்லிலும் ரூபாய் 50 இலட்சம் செலவு செய்து, கலர் சார்ட்டர் பொருத்தினால்தான் அந்த அரவை ஆலைகளுக்கு நெல் வழங்கப்படும் என்று அறிவுரை கூறினோம். அதனடிப்படையில், 639 அரசி ஆலைகளிலும் 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து, ஒவ்வொருவரும் கலர் சார்ட்டர் பொருத்தியிருக்கிறார்கள். ஆதலால், கடந்த ஆட்சியைப்போல் இல்லாமல் நெல்லை அதிக நாட்கள் இருப்பு வைக்காமல் விரைவாக நெல்லை அரைத்ததால் தற்போது நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசி தொடர்ந்து பழுப்பு, கருப்பு இல்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. அரிசி, பருப்பு, பாமாயில், சர்க்கரை உட்பட அனைத்துப் பொருட்களின் தரத்தை உறுதி செய்திட மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கிது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உணவுத் துறைக்கு ரூ. 10.500 கோடி மானியம்! முதல்வர் உத்தரவு!**

### பொது விநியோகத்திட்ட குறைதீர்வு மையம்!

பொது விநியோகத் திட்டக் குறைதீர்வு முகாம். குடும்ப அட்டைதாரர்களுக்கு வட்டம்தோறும் மாதத்திற்கு ஒரு முறை குறைதீர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மே, 2021 முதல் மே, 2024 வரை பெயர் மாற்றம், முகவரி மாற்றம்,

அட்டை வகை மாற்றம் போன்ற 1 இலட்சத்து 91 ஆயிரத்து 642 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு இன்றைக்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளகிறேன்

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த 31 தலைவர் மற்றும் 57 உறுப்பினர் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்பட்டு, முழுவீச்சில் செயல்பட துரித நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த நுகர்வோர் வழக்குகள் விரைந்து முடிக்கப்பட்டு, தற்போது 17 மாவட்டங்களில் நூறுக்கும் குறைவான வழக்குகளே நிலுவையில் உள்ளன.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையை வலுப்படுத்தி குற்றங்களைத் தடுப்பதற்காக திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதிதாக இரண்டு மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல, புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களிலும் 6 புதிய அலகுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

7-5-2021 முதல் 31-5-2024 வரையிலான நமது ஆட்சியில் 23 கோடியே 42 இலட்சத்து 85 ஆயிரத்து 564 ரூபாய் மதிப்பிலான பொது விநியோகத் திட்டப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தம் 26,842 வழக்குகள் பதியப்பட்டு 27,368 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தலில் ஈடுபட்ட 227 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 5,537 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 5,995 வாகனங்கள் ஏலம்மூலம் இன்றைக்குத் தீர்வு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியின் இதே கால கட்டத்தை ஒப்பிடும்போது இரண்டு மடங்குக்கும் மேலான அரிசி மற்றும் மூன்று மடங்குக்கும் மேலான மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இரு மடங்கு கைது வாகனக் கைப்பற்றலில் 65% அதிகம், வாகனக் கழிவில் 206% முன்னேற்றம் என குறிப்பிடத்தக்க சாதனையை இந்தத் துறை எய்துள்ளது.

### புதிய கிடங்குகள்!

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வேளாண் விளைபொருள்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் இதர பொருள்களைச் சேமித்து வைக்க கிடங்கு வசதிகளைச் செய்து வருகிறது. 2021 ஆம் ஆண்டு 78% ஆக இருந்த கிடங்கு பயன்பாட்டுத் திறன் தற்போது 95% ஆக உயர்ந்தும் 81.44 கோடி ரூபாயாக இருந்த வருவாய் 133.44 கோடி ரூபாயாக உயர்ந்தும் 22.01 கோடியாக இருந்த நிகர இலாபம் 31.51 கோடி ரூபாயாக உயர்ந்தும் உள்ளன. மொத்தம் 10,200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மூன்று புதிய கிடங்குகள் கட்டப்பட்டு 7.61 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவிலிருந்து 7.71 இலட்சம் மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் அனைத்து அலகுகளும் கடந்த மூன்றாண்டுகளில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நானும் மரியாதைக்குரிய ஒசூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்--தளி சட்டமன்றத் தொகுதியில் மலைப் பகுதியில் கடை பிரிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருந்தார். ஒரே நாளில் 10 நியாயவிலைக் கடைகளை மலைப் பகுதியில் திறந்தோம். திறப்பு விழா முடிந்து, புறப்படும் சமயத்தில், மலைவாழ் பெண் ஒருவர் வந்து, நான் mike-ல் பேச வேண்டுமென்று கேட்டார்கள். நாங்கள் எதற்கு என்று கேட்டோம். அரசுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். சரி சொல்லுங்கள் என்று சொன்னோம். அவர் சொன்னார்; இந்த கடை பிரிக்காவிடில் 8 கிலோ மீட்டர் தூரம் வந்து பொருள் வாங்கி கொண்டு போக வேண்டி இருந்திருக்கும். அதாவது வருவதற்கு 8 கிலோ மீட்டர், போவதற்கு 8 கிலோ மீட்டர் ஆக, 16 கிலோ மீட்டர் வந்து சென்றால்தான் இந்தப் பொருள்களை வாங்க முடியும் என்று சொன்னார். ஆனால், இன்றைக்கு இந்த வசதியை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள். எனவே, முதலமைச்சர் அவர்களக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொன்னார். உள்ளபடியே எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இப்படி பல்வேறு வசதிகளை இன்றைக்கு முதலமைச்சர் அவர்களின் அரசு மக்களை மகிழ்விக்கும் அரசாக திகழ்கிறது. அதேமாதிரி (குறுக்கீடு)

### பருப்பு – பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல்!

பருப்பு மற்றும் பாமாயில் மே-2024 மாதத்திற்கான 20 ஆயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 2 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள். அண்ணா ஒரு நிமிடம். உறுப்பினர் செ. ராஜேஷ்குமார் அவர்கள். 8-4-2024 அன்று இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டு அது 17-4-2024-ல்தான் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டது. அதேமாதிரி 18-4-2024-ஆம் அன்று மே-2024 மாதத்திற்கான 20 ஆயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 2 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நாளிதழ்களில் விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்டன. மே-2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் 2-5-2024 அன்று திறக்கப்பட்டு 6-5-2024 அன்று தகுதியுள்ள ஒப்பந்ததாரர்களுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு 12-5-2024 அன்று பாமாயில் ஒப்பந்ததாரர்களுக்கும் 13-5-2024 அன்று துவரம் பருப்பு ஒப்பந்ததாரர்களுக்கும் கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன. அதன்படி, மே-2024 ஆம் மாதத்திற்கான பாமாயில் பாக்கெட்டுகள் அனைத்தும், அனைத்து அங்காடிகளுக்கும் 100 சதவிகிதம் வழங்கப்பட்டுவிட்டது.

அதேமாதிரி துவரம் பருப்பினைப் பொறுத்தவரையில் மே-2024 ஒதுக்கீடான ஒரு கோடியே 89 இலட்சத்து 89 ஆயிரம் கிலோவில் ஒரு கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரம் கிலோ, அதாவது 90% இன்றைக்கு மே மாதத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதேமாதிரி ஜூன்-2024 ஆம் மாதத்திற்கான 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 2 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்காக தேர்தல் ஆணையத்தின் அனுமதி கோரி 7-5-2024 அன்று நாங்கள் கடிதம் கொடுத்தோம். எப்போது அனுமதி கிடைத்தது தெரியுமா? 27-5-2024 அன்று அனுமதி பெறப்பட்டது. அது வந்தபிறகு அதனையடுத்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்குரிய விளம்பரச் செய்தி 10 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும். 28-5-2024 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. அதற்குரிய ஒப்பந்தப்புள்ளியானது 8-6-2024 அன்று திறக்கப்பட்டன. அதன் பிறகு 11-6-2024 அன்று தகுதியுள்ள துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒப்பந்ததாரர்களுடன் நேரடி பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, 20 ஆயிரம் மெட்ரிக் டன் கேட்டோம். அவர்கள் பருப்பு வெறும் 13 ஆயிரம் மெட்ரிக் டன் கனடா மஞ்சள் பருப்பு கொள்முதல் செய்வதற்கு மூன்று ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் ஒரு கோடியே 10 இலட்சம் பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்வதற்கு நான்கு ஒப்பந்ததாரர்களுக்கும் 13-6-2024 அன்று கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டது. மேலும் கூடுதலாகத் தேவைப்படும் துவரம் பருப்பினைப் பெறும் விதமாக ஏற்கனவே மே மாதத்திற்கு கொள்முதல் செய்த ஆணைகள் வழங்கப்பட்ட துவரம் பருப்பு நான்கு ஒப்பந்ததாரர்களுக்கு கூடுதலாக 25%-க்குரிய 3 ஆயிரத்து 750 மெட்ரிக் டன் துவரம் பருப்பினையும் கொள்முதல் ஆணைகள் 15-6-2024 அன்று வழங்கப்பட்டன. அதனைத் தவிர, மே-2024 ஆம் மாதத்திற்கான பொருட்களை ஜூன்-2024 மாதம் முழுவதும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இப்போது மே மாதம் முழுவதும் முடிந்து விட்டது. ஜூன் மாதம் இன்னும் 3 நாள்தான் இருக்கிறது. அதற்குள்ளாக நாம் அந்தப் பொருட்களையெல்லாம் கொடுக்க முடியாது. ஜூலை முதல் வாரத்திற்குள்ளாக ஜூன் மாதத்திற்கான பொருட்கள் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைத்து விடும் என்பதை இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்களுக்கும் வெளியே இருக்கின்ற பொதுமக்களுக்கும் அனைவருக்கும் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அனைத்து குடும்ப அட்டைதார்களுக்கும் மே, ஜூன் மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கீட்டு அளவினை முழுமையாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சியாக இருந்த போதும் ஆளுங்கட்சியாய் வந்த போதும் தொடர்ந்து வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் 56 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் 34 அறிவிப்புகள் நிறைவேற்றியுள்ளோம். 22 அறிவிப்புகளின் பணிகள் நிறைவேற்றத்தில் உள்ளது. இத்துறையின் மூன்றாண்டு சாதனைப் பட்டியல் தொகுப்பு தனித்தனியே உறுப்பினர்களின் பார்வைக்கு வழங்கப்பட்டுள்ளது. புதிய அறிவிப்புகள் இன்றைக்கு மொத்தம் 20 அறிவிப்புகள் இருக்கிறது. அதில் 3 அறிவிப்புகளை மட்டும் நான் படிக்கின்றேன். மற்றவற்றை இந்த சபையிலே நான் படித்ததாக கருதி, சட்டமன்றப் பதிவேட்டிலே அதைப் பதிவு செய்துகொள்ளுமாறு பேரவைத் தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.

1. பொது விநியோகத் திட்டத்திற்கு 41 ஆயிரத்து 250 மெட்ரிக் டன் கொள்ளளவில் 29 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் கட்டப்படும்.

2. 18000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 6 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் உள்ளிட்ட 20 அறிவிப்புகளை சட்டமன்றத்தில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள் 2024-2025 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

1. மாவட்ட அளவில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குப் போதுமான பயிற்சி அளித்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 பேர் வீதம் 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 இன்கீழ் நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் ஒருங்கிணைந்து அளிக்கப்படும். தமிழ்நாடு நுகர்வோர் நலநிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒரு கோடி ரூபாய் இப்பயிற்சிக்காகச் செலவிடப்படும்.

2. கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களில் உள்ள மாணவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி, அவர்களை விழிப்புணர்வுமிக்க நுகர்வோராக ஆக்கும் நோக்கில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேசிய நுகர்வோர் தினமான டிசம்பர் - 24 மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் மார்ச் - 15 ஆகிய நாட்களை முன்னிட்டு ரூபாய் 50 இலட்சம் செலவில் தமிழ்நாடு நுகர்வோர் நலநிதியிலிருந்து நுகர்வோர் திருவிழா நடத்தப்படும். இதில் கண்காட்சிகள் மற்றும் பேரணிகள் நடத்தப்படும். இதில் 1,817 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் இளைஞர்கள் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள இயலும்.

3. நுகர்வோர் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட துறை சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்வு செய்வதற்கான வழிமுறைகளை நுகர்வோர், நுகர்வோர் சட்டங்களைச் செயல்படுத்துவோர் மற்றும் நுகர்வோர் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் விவாதித்து நுகர்வோர் பாதுகாப்பினை மேம்படுத்த உரிய பரிந்துரைகள் பெறப்படும் வகையில் நான்கு மாவட்டங்களில் கருத்துப்பட்டறைகள் நடத்தப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஆண்டிற்கு சுமார் 40 இலட்சம் மெ.டன் அரிசி மற்றும் இன்றியமையாப் பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நகர்வு செய்யப்படுகின்றன. வழித்தடங்களைச் சீரமைப்பதன் வாயிலாகப் போக்குவரத்துச் செலவினைக் குறைத்து பொது விநியோகத் திட்டப் பொருட்களை நியாயவிலைக் கடைகளுக்கு விரைவாக நகர்வு செய்யவும் பொது விநியோகத் திட்டத்தின் செயல்திறனை அதிகரிக்கவும் இயலும். இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கும் கழகக் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கும் இன்றியமையாப் பொருட்களின் நகர்விற்கு குறைந்த தூரத்தில் உகந்த வழித்தடங்கள் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறையால் முழுமையாக போக்குவரத்தை சீர்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். வழித்தடங்கள் சீரமைப்பு செயல்படுத்தப்படும் நிலையில் இன்றியமையாப் பொருட்கள் நியாய விலைக் கடைகளுக்கு உரிய நேரத்தில் சென்றடையும். இதன்மூலம் பொது விநியோகத் திட்டப்பணி மற்றும் நகர்வுப் பணி மேம்படுத்தப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகளின் மொத்தக் கொள்ளளவு ரூ.20.86 இலட்சம் மெ.டன் ஆகும். கிடங்குகளில் சேமிக்கப்படும் உணவுப் பொருட்ளைப் பூச்சிதாக்கத்திலிருந்து பாதுகாத்து தரத்தினை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. உணவுப் பொருட்களைச்சேதப்படுத்தும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக புறஊதாக்கதிர் விளக்குப் பொறிகள் பயன்படுத்தப்படும். புறஊதாக்கதிர் விளக்குப் பொறிகள் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பினைத் தடுப்பதுடன், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அமையும், ஆகவே, அனைத்து மண்டலங்களிலும் உள்ள கிடங்குகளில் ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 புறஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் அமைக்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில், 29 மண்டலங்களில் 1,505 அமுதம் நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்தக் கட்டடங்கள் அரசு கட்டடங்கள் / தனியார் வாடகைக் கட்டடங்கள் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. இதில் 607 நியாய விலைக் கடைகள் அரசு மற்றும் கழகக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இதில் 100 அமுதம் நியாயவிலை அங்காடிகள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 507 அமுதம் நியாய விலை அங்காடிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. நியாய விலைக் கடைகளைப் பல்வேறு கட்டடங்களில் சீரமைக்க அரசு உறுதி பூண்டுள்ளதைத் தொடர்ந்து, பொது மக்களின் நலனுக்காக நியாய விலைக் கடைகளில் வண்ணம் தீட்டுதல், கழிவறை வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தளம், முகப்புத் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல் போன்ற வசதிகளை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. 2024-2025 நிதி ஆண்டில் பதினோரு மண்டலங்களில் செயல்படும் 100 அமுதம் நியாய விலை அங்காடிகளை முன்னுரிமை அடிப்படையில் அங்காடி ஒன்றிற்கு ரூபாய் 5 லட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதியினைக் கொண்டு மேம்படுத்தப்படும்.

7. ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்லினை நேரடியாக கொள்முதல் செய்து 21 கழக நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் தற்போது அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் 639 தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்து பெறப்படும் செறிவூட்டப்பட்ட கண்டுமுதல் அரிசி பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.15 கோடியில் அமைக்கப்படும்!**

அரவை தொகுப்பு (Hulling Module):

அரவை தொடர்பான அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து அரசு மற்றும் இந்திய உணவுக் கழகத்தால் கோரப்படும் அரவை தொடர்பான அனைத்துப் புள்ளி விவரங்களையும் உடனுக்குடன் அனுப்பும் வகையில் e-DPC Software system-ல் அரவை தொகுப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவில் அரவை முகவர்களின் பட்டியல், முகவரி, மாதாந்திர அரவைத்திறன், காப்புத் தொகை மற்றும் வங்கி உத்தரவாதம் செலுத்திய விவரம், ஒப்பந்தம் காலாவதியாகும் நாள், கொதிகலன் பற்றிய விவரம், மின் இணைப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் அதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேற்படி உருவாக்கப்பட்டுள்ள அரவை தொகுப்பு பரிசோதனை அடிப்படையில் செயல்பாட்டில் உள்ளதுடன் வரும் கே.எம்.எஸ் 2024-2025 முதல் முழு அளவில் செயல்படுத்தப்படும். நடப்பாண்டு முதல் அரவை ஆலைகளின் மின்நுகர்வு கண்காணிக்கப்படுவதன் மூலம் அரவைக்கு வழங்கப்படும் நெல்லினை அரவை முகவர்கள் முறையாக அரவை செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்குவது உறுதி செய்யப்படும். இவ்வாறு மின்நுகர்வு கண்காணிக்கப்படுவதால் நெல் அரவை மற்றும் அரிசி ஒப்படைப்பு செய்யப்படுவதில் வெளிப்படைத் தன்மை மேன்மை அடையும்.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கிடங்குகள் மற்றும் 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலை வளாகங்களில் பசுமைச் சூழலை மேம்படுத்த மரக்கன்றுகள் நடப்பட்டுப் பராமரிக்கப்படும். இதற்கென மண்ணின் வகைக்கேற்ப புங்கன், வாகை, நாவல், மகிழம், வேம்பு, அத்தி, நீர்மருது, மகோகனி, இலுப்பை, வாதாம், விலா, புளி மற்றும் கொடிக்காய்ப்புளி போன்ற மரக்கன்றுகள் வனத்துறை / ஊரக வளர்ச்சித் துறை / வேளாண் / தோட்டக்கலை துறைகளிலிருந்து பெற்று நட்டுப் பசுமைச் சூழல் மேம்படுத்தப்படும்.

9. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து வரும் 7,253 பணியாளர்களில், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், மின் பணியாளர்கள், துப்புரவாளர்கள், நவீன அரிசி ஆலைகளில் உதவுபவர்கள், உதவி இயக்குபவர்கள், இயக்குபவர்கள், உதவி பண்டகக் காப்பாளர்கள் மற்றும் கொதிகலன் இயக்குபவர்களுக்குச்சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வழங்குவதைப் போன்று, அமுதம் சில்லரை அங்காடிகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள், கிடங்குகள், பெட்ரோல்/ டீசல் பங்குகள், எரிவாயு முகமைகள், மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மற்றும் இதர களப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பட்டியல் எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், எடையாளர்கள் மற்றும் காவலர்களுக்கு (4,710 பணியாளர்கள்) பொதுமக்கள் எளிதாக அடையாளம் காணும் வகையில் சிறப்பு நேர்வாக நடப்பு நிதியாண்டிற்கு மட்டும் ரூபாய் 2 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதியினைக் கொண்டு சீருடைகள் வழங்கப்படும்.

10. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத்திட்ட உணவுப் பொருட்களான அரிசி, செறிவூட்டப்பட்ட அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில், கருப்பு கொண்டைக்கடலை மற்றும் பச்சைப் பயறு ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டுப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. உணவுப் பொருட்கள் பெறப்படும் போது கிடங்குகளில் பணிபுரியும் தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்கள் அவற்றை முன்பகுப்பாய்வு செய்து அதன் தர நிலையை உறுதி செய்த பின்னர் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டம், சிறப்புப் பொது விநியோகத் திட்டம், சத்துணவுத் திட்டம் மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்படுகிறது. கிடங்குகளில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் தரத்தினைப் பராமரித்திட குறிப்பிட்ட கால இடைவெளியில் தேவையான பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளான பூச்சிக் கொல்லி மருந்து தெளித்தல், புகை மூட்டமிடுதல், எலித் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் தரக்கட்டுப்பாடு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அவ்வப்போது புத்தாக்கப்பயிற்சி வழங்குவது அவசியமானதாகும். எனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் 488 தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டில் ரூபாய் 25 இலட்சம் செலவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதியினைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும்.

11. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 3,600 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் நடத்தி வருகின்றது. இவற்றில் 620 நிலையங்கள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஏனைய நேரடி கொள்முதல் நிலையங்கள் தனியார் வாடகைக் கட்டடங்கள், அரசு சார்ந்த கட்டடங்கள் ஆகியவற்றில் இயங்கி வருகின்றன. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகளைப் பாதுகாப்பான முறையில் பெற்றிடவும், சேமித்திடவும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அரசு நிறுவி வருகிறது. நெல் விவசாயிகளின் நலனுக்காக இதனை அதிகரித்திட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், தென்காசி, தேனி, கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும்.

12. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்பட்டு வரும் 21 நவீன அரிசி ஆலைகளில் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லைக் கழக ஆலைகளில் கண்டுமுதல் அரிசியாக அரவை செய்து தரமான அரிசி பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

இந்த ஆலைகளில் வரும் கழிவு நீரை அகற்ற தஞ்சாவூர் மண்டலம் அம்மன் பேட்டை, திருவாரூர் மண்டலம் சுந்தரக் கோட்டை, மயிலாடுதுறை மண்டலத்தில் எருக்கூர்-II மற்றும் சித்தர்காடு, கடலூர் மண்டலத்தில் நெய்வேலி, சிவகங்கை மண்டலத்தில் மானாமதுரை நவீன அரிசி ஆலைகளில் ரூபாய் 7.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதியினைக் கொண்டு அதி நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுச் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

13. பொது விநியோகத் திட்ட உணவு பொருட்கள் தங்குதடையின்றி விரைவாகச் சென்றடைய ஏதுவாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய வட்டங்களுக்கு வட்ட செயல்முறைக் கிடங்கு வளாகங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கட்டப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் இதர

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்